(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 6th Term Term Examination - 2022

பொருளியல் I
Economics I

Two Hours
Gr -13 (2022)

21 | T | I

**அறிவுறுத்தல்கள்:**
- ♣ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ♣ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
- ♣ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்தும் பின்பற்றுக.

***1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1),(2),(3),(4),(5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனை குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (x) இடுவது மூலம் காட்டுக.***


01. பொருளாதாரத்தில் மாதிரிகளை உருவாக்கும் செயல்முறையில் பல படிமுறைகள் காணப்படுகின்றது. அதன் ஆரம்ப படிமுறையாக எது காணப்படும்?
1. கருதுகோளை முன்வைத்தல்.
2. பிரச்சினைகளை விளக்க பயனுள்ள மாறிகளை தெரிவுசெய்தல்.
3. உருவாக்கப்பட்ட கருதுகோளின் அடிப்படையில் எதிர்வுகூறலை மேற்கொள்ளல்
4. பிரச்சினைகளை இனங்காணுதல்
5. பிரச்சினைகளுக்கு பொருத்தமான நிபந்தனைகளை முன்வைத்தல்

02. பின்வருவனவற்றுள் எதனை நிலம் என்ற உற்பத்திக் காரணியின் பொருளியல் பண்பாக கருதுவீர்?
1. நெகிழ்வுள்ள நிரம்பலைக் கொண்டது.
2. மனித முடிவுகளால் நிரம்பலை மாற்றியமைக்கக் கூடியது.
3. வாடகை என்ற காரணி வருமானத்தினை உரிமையாளருக்குப் பெற்றுக்கொடுக்கும்.
4. இயற்கையினால் வரையறுக்கப்பட்ட நிரம்பலில் கிடைப்பவை.
5. உற்பத்தி செயன்முறையில் பயன்படுத்தப்படும்போது அமையச்செலவினை தோற்றுவிக்காதவை.

03. தாராள சந்தைப் பொருளாதாரமொன்று “எப்படி உற்பத்தி செய்தல்” என்ற அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைக்கு எவ்வாறு தீர்வுகாணுகின்றது.
1. பொருட்சந்தை, காரணிச்சந்தையில் விலை சமிக்ஞை மூலம் வளங்களை ஒதுக்கீடு செய்வதன் மூலம்.
2. காரணிச்சேவையின் உரிமையாளர்களுக்கிடையில் காரணி வருமானத்தினை பங்கீடு செய்வதன் மூலம்.
3. காரணிச் சந்தையில் விலைமூலம் தகவல்களை திரட்டி செலவு குறைந்த செயற்றிறன் மிக்க தொழினுட்பத்தினை தெரிவுசெய்வதன் மூலம்.
4. பொருட்சந்தையில் விலைமூலம் தகவல்களைத் திரட்டி இலாபகரமான தொழினுட்பத்தினை தெரிவு செய்வதன் மூலம்.
5. காரணி விலையினை பரிமாற்றப்படும் காரணித் தொகையினால் பெருக்க வருகின்ற வருமானத்தின் அடிப்படையில்.

(All Rights Reserved/ *முழுப்பதிப்புரிமை உடையது*)

04. பின்வரும் உற்பத்தி சாத்திய வளையியில் ஒரு நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியை எது வெளிப்படுத்துகின்றது?




1. B புள்ளியிலிருந்து G புள்ளிக்கு அசைதல்
2. B புள்ளியிலிருந்து C புள்ளிக்கு அசைதல்
3. E புள்ளியிலிருந்து D புள்ளிக்கு அசைதல்
4. B புள்ளியிலிருந்து E புள்ளிக்கு அசைதல்
5. A புள்ளியிலிருந்து D புள்ளிக்கு அசைதல்

05. நுகர்வுப்பண்டமொன்றின் சந்தை கேள்வி மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தாத காரணியொன்று.
1. கருத்தில் எடுக்கப்படும் பொருளின் விலைமாற்றம்.
2. தொடர்புடைய பண்டத்தின் விலை மாற்றம்.
3. நுகர்வோரின் பணவருமான மாற்றம்
4. நுகர்வோரின் விலை தொடர்பான எதிர்பார்ப்புகள் மாற்றமடைதல்
5. நுகர்வோரின் எண்ணிக்கையில் ஏற்படுகின்ற மாற்றம்.


06. ஏனைய விடயங்கள் மாறாத நிலையில் கிபன் பண்டமொன்றின் விலை வீழ்ச்சியடையும் போது அதன் கேள்வித்தொகை வீழ்ச்சியடைவதற்குரிய பொருத்தமான காரணம் எது?
1. நுகர்வோரின் மெய்வருமானம் அதிகரித்து கொள்வனவு செய்ய திட்டமிட்டுள்ள அளவை அதிகரித்தல்.
2. நுகர்வோரின் மெய்வருமான அதிகரிப்பினால் கேள்வித்தொகையில் ஏற்படும் வீழ்ச்சியின் அளவை விட சார்பு விலை வீழ்ச்சியினால் ஏற்படும் கேள்வித்திகை அதிகரிப்பு சிறிதாகக் காணப்படல்.
3. நுகர்வோரின் மெய்வருமான அதிகரிப்பினால் கேள்வித்தொகையில் ஏற்படும் வீழ்ச்சியின் அளவை விட சார்பு விலை வீழ்ச்சியினால் ஏற்படும் கேள்வித்திகை அதிகரிப்பு பெரியதாகக் காணப்படல்.
4. நுகர்வோரின் மெய்வருமான வீழ்ச்சியினால் ஏற்படும் கேள்வித்தொகை வீழ்ச்சியின் அளவை விட சார்புவிலை அதிகரிப்பதனால் ஏற்படும் கேள்வித்தொகை வீழ்ச்சி பெரியளவாகக் காணப்படும்.
5. எதிரான வருமான விளைவினை விட எதிரான பதிலீட்டு விளைவு பலமானதாகக் காணப்படல்.

07. பாணுக்கான சந்தை நிரம்பல் வளையியை இடப்புறமாக இடம் பெயரச்செய்வதில் செல்வாக்குச் செலுத்தும் காரணியொன்று.
1. பாணுக்கான சந்தை விலையில் ஏற்பட்ட அதிகரிப்பு.
2. பாணின் மீதான நுகர்வோர் சுவையில் ஏற்பட்ட வீழ்ச்சி
3. வலுப்பொருட்களின் விலையேற்றம்.
4. வெதுப்பகங்களுக்கு அரசாங்கம் மானிய விலையில் கோதுமை மாவினை வழங்குதல்.
5. மாவுடன் தொடர்புடைய பண்டங்களின் விலை மாற்றத்தினால் பாணின் சார்பு இலாபம் அதிகரித்தல்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

08. தரப்பட்டுள்ள வரைபடத்தின்படி $S_1$ என்ற நிரம்பல் கோட்டிற்குரிய பொருத்தமான நிரம்பல் சார்பு எது?


1. Qs = 15 + 20p
2. Qs = -100 + 20p
3. Qs = -150 + 10p
4. Qs = -300 + 20p
5. Qs = 300 + 20p




09. சில்வா என்பவரின் மாதாந்த வருமானம் சராசரியாக 50000 ரூபாவிலிருந்து 70000 ரூபாவாக அதிகரித்தபோது கௌபிக்கான மாதாந்த சராசரிக் கேள்வி 4kg இலிருந்து 3kg ஆக வீழ்ச்சியடைந்தது. இத்தரவின் அடிப்படையில் கௌபிக்கான வருமான கேள்வி நெகிழ்ச்சியையும் அப்பண்டத்தின் இயல்பினையும் சராசரியாக வெளிப்படுத்தும் விடை எது?

| | வருமானக் கேள்வி நெகிழ்ச்சி | பண்டம் |
|---|---|---|
| 1. | - 0.86 | இழிவுப் பண்டம் |
| 2. | - 0.86 | அத்தியாவசியப் பண்டம் |
| 3. | - 0.63 | ஆடம்பரப் பண்டம் |
| 4. | + 0.63 | இழிவுப் பண்டம் |
| 5. | - 0.75 | இழிவுப் பண்டம் |

10. X என்ற பண்டத்தின் கேள்வி, நிரம்பல் வளையிகளை பின்வரும் வரைபடம் வெளிப்படுத்துகின்றது இப்பண்டத்தின் சமநிலை விலையில் விலைக்கேள்வி நெகிழ்ச்சி, விலை நிரம்பல் நெகிழ்ச்சி பெறுமானத்தினை சரியாக வெளிப்படுத்துவது.




| | விலைக்கேள்வி நெகிழ்ச்சி (PEd) | விலை நிரம்பல் நெகிழ்ச்சி (PEs) |
|---|---|---|
| 1. | - 1.33 | 2.0 |
| 2. | - 2.0 | 2.0 |
| 3. | - 1.33 | 1.8 |
| 4. | - 1.5 | 1.33 |
| 5. | - 2.0 | 1.33 |

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)


11. மரக்கறிகள் சார்பளவில் விலைகேள்வி நெகிழ்ச்சியற்ற பண்டமாகக் காணப்படுகின்றது. மரக்கறிப் போட்டிச் சந்தையில் உரவகைகள், எரிபொருட்கள் விலையேற்றம் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதனை சரியாக புலப்படுத்துவது.

| | மரக்கறி நிரம்பல் | மரக்கறிகளின் விலை | மரக்கறி செய்கையாளர்கள் வருமானம் |
|---|---|---|---|
| 1. | அதிகரிக்கும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 2. | குறையும் | குறையும் | குறையும் |
| 3. | குறையும் | அதிகரிக்கும் | குறையும் |
| 4. | குறையும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 5. | குறையும் | மாற்றமடையாது | அதிகரிக்கும் |

12. X என்ற பண்டம் பூரண கேள்வி நெகிழ்ச்சியற்றதாகக் காணப்படுகின்றது எனக் கருதவும். இப்பண்டத்தின் விற்பனையாளர் மீது அரசாங்கம் அலகு வரியினை விதிக்கின்ற போது பின்வருவனவற்றுள் எது சரியான சேர்க்கையாகக் காணப்படும்?

| | நுகர்வோன் மிகை (cs) | உற்பத்தியாளர் மிகை (Ps) | சமூக மிகை (ss) | ஈடுசெய்ய முடியாத இழப்பு |
|---|---|---|---|---|
| 1. | குறையும் | குறையும் | குறையும் | குறையும் |
| 2. | அதிகரிக்கும் | குறையும் | குறையும் | அதிகரிக்கும் |
| 3. | குறையும் | மாறாது | குறையும் | பூச்சியமாகக் காணப்படும் |
| 4. | குறையும் | மாறாது | மாறாது | பூச்சியமாகக் காணப்படும் |
| 5. | குறையும் | குறையும் | மாறாது | பூச்சியமாகக் காணப்படும் |

13. பின்வரும் வரைபடம் அரிசிக்கான போட்டிச் சந்தையின் உற்பத்தியாளர்களுக்கு மானியம் வழங்கப்பட்டதன் பின்னுள்ள நிலைமையை புலப்படுத்துகின்றது. மானியம் வழங்கப்பட்டதன் பின்னுள்ள சமூகமிகையை சரியாக புலப்படுத்துவது.




1. (M+N+S+R+Q) - P
2. (M+N+S+R+Q+S+T) - T
3. (M+N+S+T) - P
4. (N+O+P+Q+R+S) - P
5. (M+N+S+T) - R

14. X என்ற அத்தியாவசியப் பண்டத்திற்கு அரசு நிர்ணயித்த உச்ச விற்பனை விலையை நீக்கி சந்தை விலை செயற்பட அனுமதித்தால் பின்வரும் கூற்றுக்களில் எது உண்மையாகவிருக்கும்?
1. நுகர்வோர், உற்பத்தியாளர் மிகைகள் இரண்டும் அதிகரிக்கும்.
2. நுகர்வோர், உற்பத்தியாளர் மிகைகள் இரண்டும் வீழ்ச்சியடையும்.
3. உற்பத்தியாளர் மிகை வீழ்ச்சியடைவதோடு உற்பத்தியாளரின் வருமானம் அதிகரிக்கும்.
4. உற்பத்தியாளர் மிகை அதிகரிப்பதோடு உற்பத்தியாளரின் வருமானமும் அதிகரிக்கும்.
5. மொத்த மிகை அதிகரிப்பதோடு நுகர்வோன் செலவும் வீழ்ச்சியடையும்.

(All Rights Reserved/ *முழுப்பதிப்புரிமை உடையது*)

15. X என்ற விவசாயப் பண்டத்தின் கேள்வி, நிரம்பல் சார்புகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

$$Qd = 600 - 10P \qquad Qs = -50 + 10P$$

இப்பண்டத்தின் உற்பத்தியாளர்களுக்கு ஆதரவளிக்கும் அரசு 50 ரூபாவை உத்தரவாத விலைத்திட்டமாக செயற்படுத்தி மிகை நிரம்பலை கொள்வனவு செய்யும்போது அரசுக்கு ஏற்பட்ட மொத்தச் செலவும் தேறிய சமூக நல இழப்பும் எவ்வளவாகக் காணப்படும்?

| | அரச செலவு | தேறிய சமூக நலன் இழப்பு |
|---|---|---|
| 1. | ரூபா 17,500 | ரூபா 3,062.5 |
| 2. | ரூபா 17,500 | ரூபா 14,437.5 |
| 3. | ரூபா 35,000 | ரூபா 7,000.5 |
| 4. | ரூபா 15,750 | ரூபா 7,000.0 |
| 5. | ரூபா 15,750 | ரூபா 3,062.5 |

16. ''குறுங்கால உற்பத்தி தொழிற்பாடு'' தொடர்பான மிகப்பொருத்தமான விடை எது?
1. உள்ளீட்டிற்கும் வெளியீட்டிற்கும் இடையிலான தொடர்பை காட்டுவது.
2. உள்ளீட்டிற்கும் வெளியீட்டிற்கும் இடையிலான தொழில்நுட்ப ரீதியான தொடர்பை காட்டுவது.
3. மூலதனம், தொழில்நுட்பம் கொடுக்கப்பட்ட நிலையில் மாறும் உள்ளீட்டிற்கும் வெளியீட்டிற்கும் இடையிலான தொழில்நுட்ப ரீதியான தொடர்பை காட்டுவது.
4. மூலதனம், ஊழியம் ஆகிய உள்ளீட்டிற்கும் வெளியீட்டிற்கும் இடையிலான தொழில்நுட்ப ரீதியான தொடர்பை காட்டுவது.
5. தரப்பட்ட காலப்பகுதியில் அனைத்து உள்ளீடுகளாலும் பெறக்கூடிய உச்ச வெளியீட்டை வெளிப்படுத்தவது.


17. பின்வரும் அட்டவணை நிறுவனமொன்றின் எல்லைச் செலவை வெளிப்படுத்துகின்றது.

| வெளியீடு (Q) | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| எல்லைச் செலவு (MC) | 400 | 300 | 200 | 300 | 400 | 500 |

இந்நிறுவனத்தின் மொத்த நிலையான செலவு ரூ 2000 எனக் கொள்க. வெளியீடு 4 அலகாக இருக்கும் போது சராசரி மொத்தச் செலவு எவ்வளவாகக் காணப்படும்?
1. ரூபா 300
2. ரூபா 500
3. ரூபா 800
4. ரூபா 300
5. ரூபா 900

18. ''தனியுரிமை'' தொடர்பான பிழையான கூற்று எது?
1. மிகவும் பலம் வாய்ந்த ஒரு நிறுவனம் தொழிலில் காணப்படும்
2. தனியுரிமை நிறுவனத்தின் சராசரி வருமானத்தை விட எல்லை வருமானம் சிறிதாகக் காணப்படும்
3. தனியுரிமை நிறுவனமொன்றினால் பொருளின் விலை தொகை ஆகிய இரண்டிலும் ஒரே நேரத்தில் செல்வாக்கு செலுத்த முடியும்
4. தனியுரிமை நிறுவனத்தின் மொத்த வருமானம் கேள்வி நெகிழ்ச்சி ஒன்றாக (PED=1) இருக்கும் போது உச்சமடைந்திருக்கும்
5. தனியுரிமை நிறுவனம் எதிர்கொள்ளும் கேள்விக்கோடு இடமிருந்து வலமாக மேலிருந்து கீழ்நோக்கி சரிந்து செல்லும்.

19. வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு செலவு மற்றும் கேள்வி வளையிகளை எதிர் நோக்கும் போட்டி உற்பத்தி நிறுவனமொன்று தனது வெளியீட்டை Q1 இலிருந்து Q2 ஆக அதிகரிக்குமாயின்




(1) சாதாரண இலாபத்தை உழைக்கும்.
(2) இலாபத்தில் ஓர் அதிகரிப்பினை அனுபவிக்கும்.
(3) இலாபத்தில் ஓர் வீழ்ச்சியினை அனுபவிக்கும்.
(4) வருவாய்கள் அதிகரித்தாலும் செலவுகள் அதிகரிக்காது.
(5) செலவுகள் அதிகரித்தாலும் வருவாய்கள் அதிகரிக்காது.

20. பொருளாதார விரிவாக்கத்தின்போது பின்வருவனவற்றுள் எது இடம்பெறும் என எதிர்பார்க்கலாம்?

| | மெய்வெளியீடு | பொதுவிலைமட்டம் | தொழிலின்மை |
|---|---|---|---|
| 1. | வீழ்ச்சியடையும் | அதிகரிக்கும் | வீழ்ச்சியடையும் |
| 2. | அதிகரிக்கும் | வீழ்ச்சியடையும் | வீழ்ச்சியடையும் |
| 3. | அதிகரிக்கும் | அதிகரிக்கும் | வீழ்ச்சியடையும் |
| 4. | அதிகரிக்கும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 5. | அதிகரிக்கும் | மாற்றமடையாது | அதிகரிக்கும் |

21. பின்வருவனவற்றில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அளவில் பாதிப்பை ஏற்படுத்தாதது எது?
   1. நுகர்வோனொருவன் தனது தனிப்பட்ட உபயோகத்திற்காக புதிய மோட்டார் வண்டியொன்றை கொள்வனவு செய்தல்.
   2. அரசாங்கம் தனது பாதுகாப்பு கற்கை நிறுவனத்திற்காக புதிய பேரூந்து வண்டியொன்றை கொள்வனவு செய்தல்.
   3. நுகர்வோனொருவன் சிகையலங்கார சேவையினைப் பெற்றுக் கொள்ளல்.
   4. ஒரு முதலீட்டாளன் அரியவகை ஓவியமொன்றை ஏலத்தில் கொள்வனவு செய்தல்.
   5. ஒரு நிறுவனம் தனது தொழிற்சாலைக்காக புதிய மின்பிறப்பாக்கி ஒன்றைக் கொள்வனவு செய்தல்.

22. இலங்கையின் தேசியகணக்குதொடர்பானவிபரங்கள் வருமாறு பெறுமதிகள் யாவும் பில்லியன் ரூபாக்களிலுள்ளது.

| விபரம் | பெறுமதி |
|---|---|
| ஊழியர்களின் நட்டஈடு | 3300 |
| தேறியதொழிற்பாட்டுமிகை | 5900 |
| உற்பத்திமீதானமானியங்களைகழித்த ஏனைய வரிகள் | 450 |
| நிலையான மூலதனநுகர்வு | 800 |
| கலப்புவருமானம் | 750 |
| வெளிநாட்டிலிருந்தானதேறியமுதன்மைவருமானம் | -600 |

இத்தரவுகளின்படி இலங்கையின் மொத்த தொழிற்பாட்டுமிகையின்பெறுமதி எவ்வளவாகக் காணப்படும்

1. 7450 பில்.ரூபா 2. 6350 பில்.ரூபா 3. 6700 பில்.ரூபா
4. 6100 பில்.ரூபா 5. 10150 பில்.ரூபா

23. எளிய பொருளாதாரமொன்றின் நுகர்வு சார்பு $C=200+0.75y$ இலிருந்து $C=200+0.8y$ ஆக மாற்றமடைவதாகக் கருதவும். இம்மாற்றம் முதலீட்டுப் பெருக்கியிலும் சமநிலைத் தேசிய வருமானத்திலும் எத்தகைய மாற்றத்தினை ஏற்படுத்தும்?

| | முதலீட்டுப் பெருக்கி | சம நிலைத் தேசிய வருமானம் |
|---|---|---|
| 1. | அதிகரிக்கும் | குறையும் |
| 2. | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 3. | குறையும் | அதிகரிக்கும் |
| 4. | குறையும் | குறையும் |
| 5. | மாற்றமடையாது | அதிகரிக்கும் |

24. அரசாங்கமும் வெளிநாட்டுத் துறையும் அற்ற பொருளாதாரமொன்றில் வருமானம் 1000 மில்லியன் ரூபாவால் அதிகரித்த போது நுகர்வுச் செலவீடு 800 மில்லியன் ரூபாவால் அதிகரித்தது. ஏனையவை மாறாத நிலையில் இப் பொருளாதாரத்தின் முதலீடு 100 மில்லியன் ரூபாவால் அதிகரிக்கும்போது நுகர்வு, சேமிப்பு எவ்வளவால் அதிகரிக்கும்?

| | நுகர்வு (C) | சேமிப்பு (S) |
|---|---|---|
| 1. | 400 மில்லியன் ரூபா | 200 மில்லியன் ரூபா |
| 2. | 800 மில்லியன் ரூபா | 100 மில்லியன் ரூபா |
| 3. | 1000 மில்லியன் ரூபா | 200 மில்லியன் ரூபா |
| 4. | 500 மில்லியன் ரூபா | 100 மில்லியன் ரூபா |
| 5. | 400 மில்லியன் ரூபா | 100 மில்லியன் ரூபா |

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

25. சமநிலை வரவு செலவுத்திட்டப் பெருக்கியை கணிப்பதற்கு பொருத்தமான சமன்பாடு எது?

1. $\frac{1-mpc}{1-mps}$ 2. $\frac{1-mps}{1-mps}$ 3. $\frac{mpc}{mpc}$

4. $\frac{1-mpc}{1-mpc}$ 5. $\frac{1+mps}{1-mpc}$

26. பொருளாதாரமொன்றின் செலவுச்சார்பு (E) = 300+0.75y எனத் தரப்பட்டுள்ளது. இப் பொருளாதாரத்தின் சமநிலைத் தேசிய வருமானம் 1200 மில்லியன் ரூபாவாகக் காணப்படுகின்றது. இப்பொருளாதாரத்தின் நிறைதொழில்மட்ட வருமானம் 1500 மில்லியன் ரூபாவாக இருக்கும்போது பின்வரும் கூற்றுக்களில் எது உண்மையாக காணப்படும்.
1. வெளியீட்டு இடைவெளி 500 மில்லியன் ரூபாவாகக் காணப்படும்.
2. நிறைதொழில்மட்டத் தேசிய வருமான மட்டத்தினை அடைந்து கொள்வதற்கு முதலீட்டினை 200 மில்லியன் ரூபாவால் அதிகரிக்க வேண்டும்.
3. 75 மில்லியன் ரூபா பெறுமதியான திட்டமிடப்படாத கையிருப்புக்கான திரட்சி ஏற்பட்டுள்ளது.
4. 175 மில்லியன் ரூபா பெறுமதியான திட்டமிடப்படாத கையிருப்புக்களின் திரட்சி வீழ்ச்சியடைந்துள்ளது.
5. நிறைதொழில்மட்ட தேசிய வெருமானத்தினை அடைவதற்கு வரிகளை 300 மில்லியன் ரூபாவால்குறைக்க வேண்டும்.

27. பின்வருவனவற்றுள் எது அதி திரவ மயமானது?
1. அஜித் பெயரில் மக்கள் வங்கியிலுள்ள ரூ200.000 பெறுமதியான நடைமுறைக்கணக்கு மீதி.
2. பண்டா என்பவரின் பெயரில் இலங்கை வங்கியிலுள்ள 5 மில்லியன் ரூபா பெறுமதியான நிலையான வைப்பு.
3. அன்ரனின் பெயரிலுள்ள 10 மில்லியன் ரூபா பெறுமதியான வர்த்தகக் கட்டடங்கள்.
4. ஜெனின் என்பவரிடமுள்ள 5 மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள்.
5. சத்தியாவின் பெயரிலுள்ள தேசிய சேமிப்பு வங்கி சேமிப்புக் கணக்கிலுள்ள 500,000 பண நிலுவை.

28. பின்வருவனவற்றுள் அண்மிய பணம் **அல்லாதது** எது?
1. பொதுமக்களிடமுள்ள நாணயங்கள்
2. திறைசேரி உண்டியல்கள்
3. திறைசேரி முறிகள்
4. பரிமாற்று உண்டியல்கள்
5. சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளில் வைத்துள்ள தவணை வைப்புகள்

29. தேக்கவீக்கம் (Stagflation) என்பதனை சரியாக வெளிப்படுத்துவது.
1. உயர் பணவீக்கத்துடன் உயர்ந்த பொருளாதார வளர்ச்சி வீதத்தில் பொருளாதாரம் செயற்படுதல்.
2. எதிர்க்கணிய பொருளாதார வளர்ச்சி வீதத்துடன் 5% க்கும் குறைவான பணவீக்க வீதம் காணப்படல்.
3. பணவீக்க வீதம் உயர்ந்த மட்டத்தில் இருப்பதோடு பொருளாதார வளர்ச்சி வீதம் மிகவும் தாழ்வாகக் காணப்படுதல்.
4. பணவீக்க வீதமும் வேலையின்மை வீதமும் வருடத்திற்கு 5% க்கும் குறைவாகக் காணப்படுதல்.
5. பணவீக்க வீதம் வருடத்திற்கு 50% க்கு மேலாகயிருப்பதுடன் வேலையின்மை வீதம் 5% க்கும் குறைவாகக் காணப்படுதல்.

30. தேசிய நுகர்வோர் விலைச்சுட்டியின் (2013 = 100) அளவீட்டின் அடிப்படையில் இலங்கையின் 2021ம் ஆண்டிற்குரிய சராசரி பணவீக்க வீதம் எவ்வளவாகக் காணப்பட்டது?

1. 14.0% 2. 6.0% 3. 12.1% 4. 7.0% 5. 74.4%

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

31. இலங்கை மத்திய வங்கி தற்போது கையாளுகின்ற இறுக்கமான நாணயக் கொள்கையை (Tight monetary policy) பின்பற்றி வருகின்றது. அக் கொள்கையின் விளைவாக எதனைக் **கருதமுடியாது?**
   1. உள்நாட்டுப் பணச்சந்தையில் திரவப் பற்றாக்குறையை உருவாக்கும்.
   2. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கு வழங்கப்படும் கொடுகடன் வீழ்ச்சியடைந்தமை.
   3. மொத்தக் கேள்வியில் அதிகரிப்பினை ஏற்படுத்தி பணவீக்கத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தும்.
   4. சந்தை வட்டிவீதங்களின் அதிகரிப்பானது உரிமம் பெற்ற வங்கிகளை நோக்கிய நாணயத் திரும்பலை அதிகரிக்கச் செய்துள்ளது.
   5. மொத்தக் கேள்வியில் வீழ்ச்சியை ஏற்படுத்தி பணவீக்க வீதத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தும்.

32. பின்வருவனவற்றுள் எது உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றின் குறைந்த திரவத்தன்மையைக் கொண்ட சொத்தாகும்?
   1. வர்த்தக வங்கி வசமுள்ள உள் நாட்டு நாணயம்.
   2. வர்த்தக வங்கி வசமுள்ள வெளி நாட்டு நாணயம்.
   3. வர்த்தக வங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல்கள்
   4. வர்த்தக வங்கிகளால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள்.
   5. வர்த்தக வங்கிகள் பேணுகின்ற நியதிச்சட்ட ஒதுக்கங்கள்.

33. வணிக வங்கித் தொழில் முறைமையொன்று 100 மில்லியன் ரூபா வைப்புகளையும் 12 மில்லியன் ரூபா காசு ஒதுக்குகளையும் வைத்திருக்கிறது எனக் கருதுக. சட்டப்படியான ஒதுக்கு வீதம் 10 சதவீதமாகத் தரப்படுமிடத்து பணநிரம்பலின் சாத்தியமான மேலதிக விரிவின் உச்ச அளவு யாது?
   1. ரூபா 10 மில்லியன்
   2. ரூபா 5.0 மில்லியன்
   3. ரூபா 20 மில்லியன்
   4. ரூபா 2.0 மில்லியன்
   5. ரூபா 100 மில்லியன்

34. A - வீதி சமிக்ஞைகள்    B - உல்லாச கடற்கரை
   C - அறிவு உருவாக்கம்    D - பெருந்தெருக்கள்
   E - மோட்டார் கார்    F - வானிலை எதிர்வுகூறல்கள்

   மேலே தரப்பட்டுள்ளவற்றில் பொதுப்பண்டத்தினை உள்ளடக்கிய சரியான விடை எது?
   1. A, D, F 2. B, C, F 3. A, B,D 4. A, C, F 5. D, E, F

35. ஒரு ‘‘மேன்மைப் பொருள்’’ என்பது
   1. ஒவ்வொருவரினதும் தகமையின் அடிப்படையில் நுகர்வோருக்கு வழங்கப்படும் பொருளாகும்.
   2. தாராள சந்தையினால் வழங்கப்படுமாயின் நுகர்வோர் மிகச் சிறியளவே கொள்வனவு செய்வார்கள் என அரசாங்கம் கருதும் பொருளாகும்.
   3. தாராள சந்தையினால் வழங்கப்படுமாயின் நுகர்வோர் தேவைப்படும் அளவைவிட மிக அதிகமான அளவில் கொள்வனவு செய்வார்கள் என அரசாங்கம் கருதும் பொருளாகும்.
   4. பொருளை நுகர்வதனால் ஒரு நுகர்வோன் பெறும் நன்மையினை எல்லா நுகர்வோருக்கும் விரிவாக்கம் செய்யப்படத்தக்க பொருளாகும்.
   5. பொருளை நுகர்வதனால் பெறப்படும் தனியார் நன்மைகள் சமூக நன்மைகளை விடக் கூடுதலாக உள்ள பொருளாகும்.

36. 2020ம் ஆண்டு அரச பாதீட்டின் நடைமுறைக் கணக்கு மீதியும் மொத்த மீதியும் மற்றும் ஆரம்பக் கணக்கு மீதியும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் எத்தனை வீதமாகக் காணப்பட்டது.

| | **நடைமுறைக் கணக்கு மீதி** | **மொத்த மீதி** | **ஆரம்பக் கணக்கு மீதி** |
|---|---|---|---|
| 1. | -3.6 | -9.6 | -3.6 |
| 2. | -7.9 | -11.1 | -4.6 |
| 3. | -7.7 | -12.2 | -6.0 |
| 4. | -7.9 | -9.6 | -3.6 |
| 5. | -7.7 | -7.6 | -4.6 |

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)


37. பின்வருவனவற்றுள் எதனை சுருக்க இறைக்கொள்கை நடவடிக்கையாகக் கருதுவீர்?
   1. தனியாள் வருமான வரிவீதங்களை கீழ் நோக்கி திருத்துதல்.
   2. அரசின் பெருள்பணிகள் மீதான நடப்புச் செலவீனத்தினை உயர்த்துதல்.
   3. அரச பாதீட்டின் நடைமுறைக்கணக்கு பற்றாக்குறையினை மேலும் அதிகரிக்கச் செய்தல்.
   4. நேரில் வரிவீதங்களை அதிகரிப்பதுடன் அரசின் நடப்புச் செலவீனத்தினை குறைத்தல்.
   5. நேரில் வரிவீதங்களை குறைப்பதுடன் அரச கடன்களுக்குரிய வட்டிக் கொடுப்பனவுகளுக்கு முந்திய பாதீட்டின் பற்றாக்குறையினை அதிகரிக்கச் செய்தல்.

38. பின்வரும் அட்டவணையில் இந்தியா, கொரியா ஆகிய நாடுகளில் ஓர் அலகு வெளியீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக தேவைப்படும் ஊழிய மணித்தியாலங்களைக் காட்டுகின்றது.

| நாடுகள் | கணனி | ஆடை |
|---|---|---|
| இந்தியா | 50 மணித்தியாலம் | 05 மணித்தியாலம் |
| கொரியா | 40 மணித்தியாலம் | 05 மணித்தியாலம் |

இத்தரவுகளின் அடிப்படையில் பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?
   1. கணனி, ஆடை இரண்டு உற்பத்தியிலும் இந்தியா முழு நன்மையைப் பெற்றுள்ளது.
   2. இந்தியா ஆடையிலும் கொரியா கணனியிலும் ஒப்பீட்டு நன்மையைப் பெற்றுள்ளது.
   3. இந்தியா கணனியில் முழு நன்மையையும் ஒப்பீட்டு நான்மையையும் பெற்றுள்ளது.
   4. கொரியா ஆடையை ஏற்றுமதி செய்ய இந்தியா கணனியை ஏற்றுமதி செய்யும்
   5. கொரியா கணனியை ஏற்றுமதி செய்ய இந்தியா ஆடையை இறக்குமதி செய்யும்

39. பின்வரும் வரைபடம் இறக்குமதி மீது தீர்வை விதித்ததன் பின்னுள்ள நிலைமைகளில் வெளிப்படுத்தப்படுகின்றது. இறக்குமதி மீது தீர்வை விதித்ததன் பின் அரசுக்கு கிடைத்த தீர்வை வருமானத்தினையும் மீளப்பெறமுடியாத நலனிழப்பு என்பவற்றை சரியாக வெளிப்படுத்துவது




| | அரசின் தீர்வை வருமானம் | மீளப்பெறமுடியாத நலனிழப்பு |
|---|---|---|
| 1. | C + F | B + D |
| 2. | G + E | B + D |
| 3. | F | C + D |
| 4. | C | D + E |
| 5. | C | B + D |


40. இலங்கையின் 2020ம் ஆண்டின் ஏற்றுமதிக் கட்டமைப்பை சரியாக வெளிப்படுத்துவது.

| | விவசாய ஏற்றுமதிகள் சதவீதம் | கைத்தொழில் ஏற்றுமதிகள் சதவீதம் | கனப்பொருட்கள் ஏனையவற்றின் சதவீதம் |
|---|---|---|---|
| 1. | 20.6 | 78.9 | 0.5 |
| 2. | 21.7 | 77.9 | 0.4 |
| 3. | 23.3 | 76.4 | 0.3 |
| 4. | 21.8 | 77.6 | 0.6 |
| 5. | 23.3 | 77.6 | 0.1 |

41. பின்வருவனவற்றுள் எது ஒரு நாட்டின் புற ஒதுக்கத்திற்குள் உள்ளடங்காது.
   1. வன் அன்னியச் செலாவணிகள்
   2. நாணயத் தங்கம்
   3. வெளிநாட்டு நாணயக் கடன்கள்
   4. மத்திய வங்கியில் உள்ள தங்க இருப்பு.
   5. விசேட எடுப்பனவு உரிமைகள்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

42. கீழே உள்ள வரைபடம் ஐக்கிய அமெரிக்க டொலர்களில் இலங்கை ரூபாவின் பெறுமதியைக் காட்டுகிறது. இலங்கை ரூபாவுக்கான கேள்வி இலிருந்து வாக நகர்வதன் விளைவு யாது?




1. ஐக்கிய அமெரிக்காவுக்கான இலங்கயின் ஏற்றுமதி விலைகள் கூடியனவாக மாறும்.
2. ஐக்கிய அமெரிக்காவுக்கு பயணம் செய்வது இலங்கை சுற்றுலாப் பயணிகளுக்கு மலிவானதாக மாறும்.
3. ஐக்கிய அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு இலங்கையின் திறைசேரி முறிகள் மிகவும் மலிவானதாக மாறும்.
4. ஐக்கிய அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு இலங்கையின் திறைசேரி முறிகள் மிகவும் செலவு கூடியதாக மாறும்.
5. ஐக்கிய அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்வதற்கான செலவு குறையும்.

43. சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நோக்கங்களில் ஒன்று
1. சர்வதேச வர்த்தகத்தில் காணப்படும் தடைகளை அகற்றி அதனை ஊக்குவித்தல்
2. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் நடைமுறைக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக பல்பக்க கொடுப்பனவு முறையை உருவாக்குதல்.
3. அங்கத்துவ நாடுகளுக்கு கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
4. அங்கத்துவ நாடுகளின் சென்மதி நிலுவைச் சமமின்மை உருவாகும் காலத்தினைக் குறைத்தல்.
5. திடீர் நிதி நெருக்கடிகளின் போது அங்கத்துவ நாடுகளுக்கு நீண்டகால கடன் வசதிகளை பெற்றுக் கொடுத்தல்.

44. இலங்கை அரசாங்கம் 2020ம் ஆண்டுமுதல் இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகளை அதிகரித்து வருகின்றது. இந் நடவடிக்கையின் பிரதான நோக்கம் என்னவாயிருக்கின்றது?
1. தேறிய ஏற்றுமதிகளின் எதிர்க்கணியப்பெறுமதியை மேலும் அதிகரித்தல்.
2. உத்தியோகபூர்வ வெளி நாட்டு ஒதுக்கத்தின் பற்றாக்குறையை நிர்வர்த்தி செய்தல்.
3. சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறையை குறைத்து வெளி நாட்டுத் தேறிய முதலீட்டு மட்டத்தினை வீழ்ச்சியடையச் செய்தல்.
4. அரச பாதீட்டின் பற்றாக்குறையை குறைத்து வெளிநாட்டுப் பொதுப்படுகடன்களின் அளவை குறைத்தல்.
5. இளந் தொழில்களை பாதுகாப்பதுடன் வர்த்தகப் பற்றாக்குறையையயும் அதிகரித்தல்.

45. குறிக்கப்பட்ட பொருளாதாரமொன்றின் தகவல்கள் கீழே உமக்கு கொடுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 2020 நடைமுறை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 58,000 மில்.ரூபா |
| 2020 உள்ளார்ந்த உற்பத்திச் சுருக்கி | 125 |
| 2019 மெய் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 45,000 மி.ரூபா |

இப்பொருளாதாரத்தில் 2020ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி வீதம்?

1. 5.5% 2. 6.66% 3. 3.11% 4. 3.42% 5. 4.11%

46. மனிதர்களுக்கு தமது மானிட ஆற்றல்களை முழுமையாக விரிவுபடுத்திக் கொள்வதற்கு போலவே அவ்வாற்றல்களை பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் துறைகளினுள் உச்சளவில் பயன்படுத்துவதற்கான ஆற்றலைப் பெற்றுக் கொடுப்பதும் எதிர்கால பரம்பரைக்கு அவ்வுரிமையை உறுதிப்படுத்துதல்,
1. சமூக அபிவிருத்தியாகும்.
2. பொருளாதார அபிவிருத்தியாகும்.
3. நிலைத்து நிற்கும் அபிவிருத்தியாகும்.
4. மானிட அபிவிருத்தியாகும்.
5. கலாசார அபிவிருத்தியாகும்.

47. இலங்கையில் மிகக்குறைந்த வருமானத்தினை பெறும் 20%த்தினர் மொத்த தேசிய வருமானத்தில் 4.8%ஐ பெற்றுக் கொள்கின்றனர். அதே போல் மிகவும் உயர்ந்த வருமானத்தினைப் பெறும் 20%த்தினர் 50.8% ஐ பெற்றுக் கொள்கின்றனர். இத்தரவுகளின் அடிப்படையில் ஐயனை பரவல் விகிதம் என்னவாகக் காணப்படும்?
1. 10.58   2. 0.094   3. 12.0   4. 6.58   5. 18.25

48. தலைக்குரிய வறுமைச்சுட்டியின் படி 2019 இல் வறுமை கூடிய முதல் 05 மாவட்டங்களும் (இறங்குவரிசையில்)
1. கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம்
2. கிளிநொச்சி, முல்லைத்தீவு, பதுளை, திருகோணமலை, யாழ்ப்பாணம்
3. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம்
4. முல்லைத்தீவு, கிளிநொச்சி, நுவரேலியா, யாழ்ப்பாணம், பதுளை
5. முல்லைத்தீவு, பதுளை, கிளிநொச்சி, நுவரேலியா, யாழ்ப்பாணம்

49. இலங்கையின் சமீப ஆண்டின் மானிட அபிவிருத்திச்சுட்டியின் பெறுமானம், தலைக்குரிய வறுமைச்சுட்டியின் பெறுமானம் மற்றும் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமானம் என்பவற்றை காட்டும் சரியான விடை?

| | மானிட அபிவிருத்திச் சுட்டி | தலைக்குரிய வறுமைச்சுட்டி | தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி |
|---|---|---|---|
| i. | 0.782 | 14.3 | 3695 டொலர் |
| ii. | 0.783 | 8.9 | 3682 டொலர் |
| iii. | 0.782 | 3.2 | 3695 டொலர் |
| iv. | 0.780 | 4.1 | 3852 டொலர் |
| v. | 0.780 | 4.1 | 4077 டொலர் |

50. பின்வரும் அட்டவணை கருதுகோள்ரீதியான ஒரு பொருளாதாரத்தின் தொழில் சந்தை பற்றிய தரவுகளைக் காட்டுகிறது.

| ஆண்டு | தொழில் வாய்ப்பில் உள்ள நபர்களின் எண்ணிக்கை (மில்லியனில்) | தொழிற்படை (மில்லியனில்) | 15வயது, அதற்கு மேற்பட்ட வீட்டுத்துறை சனத்தொகை (மில்லியனில்) |
|---|---|---|---|
| 2017 | 27 | 30 | 60 |
| 2018 | 32 | 36 | 80 |
| 2019 | 35 | 40 | 90 |

மேற்படி தரவுகளின் அடிப்படையில் ஊழியற்படையின் பங்குகொள்ளல் வீதமும் தொழிலின்மை வீதமும் 2019 ம் ஆண்டில் எவ்வாறு காணப்பட்டது.

| | ஊழியற்படையின் பங்குகொள்ளல் வீதம் | தொழிலின்மை வீதம் |
|---|---|---|
| 1. | 44.4 | 10.0 |
| 2. | 50.0 | 10.0 |
| 3. | 45.0 | 11.1 |
| 4. | 44.4 | 12.5 |
| 5. | 44.0 | 11.0 |

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## ஆறாம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 6th Term Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| பொருளியல் II / Economics II | Three Hours and ten minutes / Gr -13 (2022) | 21 | T | II |

பகுதி II

**அறிவுறுத்தல்** : உபபிரிவு **"அ"**, உபபிரிவு **"ஆ"** ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

பகுதி - **'அ'**

*(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களை தெரிவு செய்க)*

01.

i. பொருளாதாரப் பண்டத்தின் பிரதான உடமைகள் யாவை? "பொருளாதாரப் பண்டத்தின் பயனாளர்கள் விலை செலுத்துவதன் மூலமே அவற்றை பெற்றுக் கொள்ளமுடியும்" இக்கூற்றின் நடைமுறைப் பொருத்தப்பாட்டினை விளக்குக?

(04 புள்ளிகள்)

ii. **"மனித மூலதனம்"** என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது? அதன் இரண்டு முக்கியத்துவத்தினைக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

iii. ஒரு நாடு ஆடைக் கைத்தொழிலில் 200,000 தொழிலாளர்களை நாளொன்றுக்கு 8 மணித்தியாலம் பயன்படுத்தி 500 மெற்றிக் தொன் ஆடைகளை உற்பத்தி செய்வதாகக் கருதவும்.

A. ஊழிய விளைதிறன், தொழிலாக்கம் என்பவற்றை வேறுபடுத்துக.

(02 புள்ளிகள்)

B. ஊழிய விளைதிறனை அதிகரிப்பதற்கு ஒரு நாடு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

iv. அருமைப் பிரச்சினைக்கு சந்தைப் பொருளாதாரம் எவ்வாறு தீர்வு காணுகின்றது? என்பதனைச் சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

v. பின்வரும் நிகழ்வுகள்/ சம்பவங்களை உற்பத்தி சாத்திய வளையி மூலம் வெளிப்படுத்துக?

(அ) வேலையின்மை வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு

(ஆ) கொரோனா பெருந் தொற்றினால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இறந்தமை.

(இ) பொருளாதார செழிப்பு

(ஈ) எதிர்க்கணிய பொருளாதார வளர்ச்சி

(04 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

02.

i. X என்ற பண்டத்தின் கேள்வி அட்டவணை பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| வருடம் | விலை (ரூபாவில்) | கேள்வித்தொகை (அலகுகள்) |
|---|---|---|
| 2010 | 80 | 150 |
| 2013 | 100 | 110 |
| 2016 | 120 | 70 |
| 2019 | 140 | 30 |

இத்தரவுகளின் அடிப்படையில் X பண்டத்தின் கேள்வித்தொகை வீழ்ச்சியடைவதற்கு அப்பண்டத்தின் விலை அதிகரிப்புத்தான் காரணம் எனக் கூறமுடியுமா? விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. அ. **சாதாரண பண்டம்** என்றால் என்ன? (2 புள்ளிகள்)

ஆ. X என்ற பண்டத்தின் ஆகக் கூடிய கேள்வி விலை ரூபா20 ஆகக் காணப்பட்டது. அப்பண்டத்தின் விலை 4 ரூபாவால் வீழ்ச்சியடைந்த போது அதன் கேள்வித்தொகை 20 அலகுகளால் அதிகரிக்கும் எனக்கருதி கேள்விச் சார்பினை உருவாக்குக.

(2 புள்ளிகள்)

iii. நெல்லின் நிரம்பல் அதிகரிப்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைப் பட்டியல்படுத்துக?

(04 புள்ளிகள்)

iv. பருத்தி ஆடையின் விலை ரூபா 800 இலிருந்து ரூபா 1000 ஆக அதிகரித்த போது அதன் கேள்வித்தொகை 10 இலிருந்து 08 ஆக வீழ்ச்சியடைந்தது எனின் பருத்தி ஆடையை கேள்வி நெகிழ்ச்சியற்ற பண்டம் எனும் முடிவுக்கு வரமுடியுமா? உமது விடையை விளக்குக.

(4 புள்ளிகள்)

v. X என்ற பண்டத்தின் கேள்வி, நிரம்பல் சார்புகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

$$Qd = 200 – 5p$$

$$Qs = -50 + 5p$$

P = விலை ரூபாவில், Q = தொகை அலகுகளில் தரப்பட்டுள்ளது. இப்பண்டத்தின் கேள்வியானது எல்லா விலைகளிலும் 100 அலகுகளால் அதிகரிப்பதாகக் கருதவும்.

அ. புதிய சமநிலை விலை, தொகை யாது? (2 புள்ளிகள்)

ஆ. புதிய சமநிலை விலையில் உற்பத்தியாளன் மிகை எவ்வளவு? (2 புள்ளிகள்)

03.

i. X என்ற பண்டத்தின் நிரம்பல் சார்பு Qs = -200 + 5p எனத்தரப்பட்டுள்ளது. X பண்டத்தின் உற்பத்தியாளர் மீது அலகுக்கு ரூ8 இனை வரியாக விதிப்பதாகக் கருதி பின்வரும் விலைகளில் வரிக்கு பின்னுள்ள நிரம்பல் தொகையை பதிவு செய்க?

| P | 4 | 8 | 12 | 16 | 20 | 24 |
|---|---|---|---|---|---|---|
| Qs | …… | …… | …… | …… | …… | …… |

(03 புள்ளிகள்)

ii. இப்பண்டத்தின் சந்தைக்கேள்விச்சார்பு Qd = 600 - 5p எனத் தரப்படும் போது வரிக்குப் பின்னரான

அ) சமநிலை விலை, தொகை

ஆ) நுகர்வோன் மிகை

இ) உற்பத்தியாளன் மிகை

என்பவற்றைக் காண்க? (03 புள்ளிகள்)

iii. அரசாங்கம் பாற்பண்ணைத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு மானியத்தினை வழங்குவதாகக் கருதவும். அதனால் ஏற்படும் விளைவுகளை வரைபின் மூலம் விளக்குக.

(04 புள்ளிகள்)

(All Rights Reserved/ *முழுப்பதிப்புரிமை உடையது*)

iv. விவசாய விளைபொருட்களின் நிரம்பல் வீழ்ச்சியடைகின்ற போதிலும் விவசாய செய்கையாளர்களின் வருமானம் அதிகரிப்பது ஏன் என்பதனை பொருத்தமான வரைபடத்தின் மூலம் விளக்குக?

(04 புள்ளிகள்)

v. X எனும் பண்டத்தின் கேள்வி, நிரம்பல் சார்புகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

$Qd = 600-P$ $Qs = -300 +4P$

P= அலகொன்றின் விலை ரூபாவில். Q= தொகை அலகுகளில்

இப்பண்டத்தின் இழிவளவான விலையாக அரசு 200 ரூபாயினை நிர்ணயித்து அங்குள்ள மிகை நிரம்பலை கொள்வனவு செய்வதாகக் கருதவும். அவ்விலையில்.

அ. நுகர்வோர் மிகை எவ்வளவு? **(1 புள்ளி)**

ஆ. உற்பத்தியாளர் மிகை எவ்வளவு? **(01 புள்ளி)**

இ. தேறிய சமூக நலன் இழப்பு எவ்வளவு? **(4 புள்ளி)**

04.

i. குறுங்கால உற்பத்தி நிறுவனமொன்றின் சராசரி உற்பத்தி (AP), சராசரி மாறும் செலவு (AVC) என்பவற்றுக்கிடையிலான தொடர்பினை விளக்குக.

(4 புள்ளிகள்)

ii. நீண்டகால உற்பத்தி நிறுவனத்தின் சராசரிச் செலவு (LRAC) எவ்வாறு அளவுத்திட்ட விளைவு விதியுடன் தொடர்புபடுகின்றது என்பதனை புள்ளிவிபர உதாரணத்தின் மூலம் விளக்குக.

(4 புள்ளிகள்)


iii. போட்டித் தன்மையின் அடிப்படையில் (உயர் நிலையிலிருந்து தாழ் நிலை வரை) சந்தை அமைப்புக்களை பெயரிடுக.

(4 புள்ளிகள்)

iv. நிறைபோட்டித் தொழிலிலுள்ள நிறுவனமொன்று நட்டத்தினை அனுபவிக்கின்றது. அந் நிறுவனத்தின் மொத்த நட்டத் தொகையானது மொத்த நிலையான செலவின் பெறுமதிக்கு சமமானதாகக் காணப்படுவதாகக் கருதவும். இந் நிறுவனம் தொடர்ந்தும் தொழிலில் நிலைத்திருக்க முடியுமா? உமது விடையை தெளிவுபடுத்துக.

(4 புள்ளிகள்)

v. நிறைபோட்டி நிறுவனமொன்றின் குறுங்காலச் சமநிலையை பின்வரும் வரைபடம் வெளிப்படுத்துகின்றது. இந் நிறுவனம் ரூபா 60 ஐ விலையாக ஏற்று தொழிற்படுவதாகக் கருதவும். அவ்விலையில்




1. மொத்த வருமானம்
2. உற்பத்தியாளர் மிகை
3. பொருளியல் இலாபம் என்பவற்றைக் கணிப்பிடுக.

(4 புள்ளிகள்)

05.

i. பொருளாதார விரிவாக்கம், பொருளாதார வளர்ச்சி இரண்டினையும் வேறுபடுத்துக?

(04 புள்ளிகள்)

ii. ஒரு நாட்டின் மொத்தத் தேசிய வருமானம் உமக்கு தரப்பட்டுள்ளது. அதிலிருந்து தனி நபர் செலவிடத்தக்க வருமானத்தினை (PID) பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய சீராக்கங்கள் யாவை?

(04 புள்ளிகள்)

iii. ஒரு நாட்டின் தேசிய கணக்கு தொடர்பான புள்ளிவிபரம் பின்வருமாறு தரப்பட்டுள்ளது. (பெறுமதிகள் பில்லியன் ரூபாவில்)

| | |
|---|---|
| • தனியார் நுகர்வு | 10000 |
| • பொது நுகர்வு | 7000 |
| • மொத்த உள்நாட்டு மூலதனாக்கம் | 5000 |
| • இருப்பு மாற்றம் | 200 |
| • பொருட்களின் தேறிய ஏற்றுமதி | -3000 |
| • பொருட்களின் இறக்குமதி | 5000 |
| • தேறிய நேரில் வரி | 800 |
| • வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மைவருமானம் | - 500 |
| • வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறைமாற்றல்கள் | 600 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக

அ. சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி.

(2 புள்ளிகள்)

ஆ. செலவிடத்தக்க தேசிய வருமானம்.

(2 புள்ளிகள்)

iv. கருதுகோள் பொருளாதாரமொன்றின் பேரினப் பொருளியல் தரவுகள் வருமாறு?

| | | |
|---|---|---|
| மொத்த தேசிய வருமானம் | (Y) | = 8000 பில்லியன் ரூபா |
| செலவிடத்தக்க தேசிய வருமானம் | ($Y_d$) | = 7400 பில்லியன் ரூபா |
| தனியார் நுகர்வு | (C) | = 7100 பில்லியன் ரூபா |
| அரச பாதீட்டுப் பற்றாக்குறை | ($B_D$) | = 200 பில்லியன் ரூபா |
| அரச நடப்பு மாற்றல்கள் | ($T_R$) | = 50 பில்லியன் ரூபா |
| வர்த்தக மீதி | (TB) | = -300 பில்லியன் ரூபா |

இப் பொருளாதாரத்தின்

அ) அரசின் வரி வருமானம் (T)

ஆ) தனியார் முதலீடு (I)

எவ்வளவாகக் காணப்படும்?

(04 புள்ளிகள்)

v. வீக்க இடைவெளி, சுருக்க இடைவெளி என்பவற்றை பொருத்தமான வரைபடத்தின் மூலம் விளக்குக?

(04 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## "ஆ" பகுதி

06.

i. திரட்டப்பட்ட விரிந்த பண நிரம்பல் ($M_2b$) என்றால் என்ன? அதனைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

(04 புள்ளிகள்)

ii. ஒரு நாட்டின் பணநிரம்பல் 10% அதிகரிப்பு ஏற்படும் போது கட்டாயமாக பொது விலைமட்டத்திலும் 10% அதிகரிப்பு ஏற்படுமா? உமது விடையை தெளிவுபடுத்துக?

(04 புள்ளிகள்)

iii. பாயும் பணவீக்கம் (Galloping Inflation) என்றால் என்ன? இப்பணவீக்கத்தின் பொருளாதார விளைவுகள் யாவை?

(04 புள்ளிகள்)

iv. பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கைப் பொருளாதாரத்தினை மீட்டெடுப்பதற்காக இலங்கை மத்திய வங்கி மேற்கொண்ட நடவடிக்கைகளை சுருக்கமாகக் கூறுக.

(04 புள்ளிகள்)

v. கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றில் பணநிரம்பல் (M) 5000 பில்லியனாகவும் மொத்த வங்கி வைப்புக்கள் (D) 3600 பில்லியனாகவும் நியதி ஒதுக்கு வீதம் 10% ஆகவும் இருப்பதோடு வங்கிகளில் மிகை ஒதுக்குகள் எதுவும் இல்லை எனக் கருதுக?

(04 புள்ளிகள்)

அ) பணப்பெருக்கியின் பெறுமதி என்ன?

(02 புள்ளிகள்)

ஆ) மத்தியவங்கி அரசுக்கு வழங்கிய கடன்களை 40 பில்லியன் ரூபாவால் அதிகரிக்கும் போது பணநிரம்பலுக்கு யாது நிகழும்?

(02 புள்ளிகள்)

07.

i. உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவு காணப்படும் போது சமூக உத்தம மட்ட வெளியீட்டினை விட சந்தை வெளியீடு ஏன் அதிகமாகக் காணப்படும் என்பதனை பொருத்தமான வரைபடத்தின் மூலம் விளக்குக.

(04 புள்ளிகள்)

ii. வரியின் மிகைச்சுமை (Excess Burden of taxation) என்பதனால் கருதப்படுவதென்ன? வரியின் மிகைச்சுமை பூச்சியமாகக் காணப்படும் சந்தர்ப்பம் ஒன்றினையும் பொருத்தமான வரைபடத்தின் மூலம் வெளிப்படுத்துக.

(04 புள்ளிகள்)

iii. அரசாங்கத்தின் நடைமுறைச் செலவின் கூறுகளை குறிப்பிட்டு இலங்கை அரசாங்கம் தன் நடைமுறைச் செலவினை குறைக்க வேண்டியதன் அவசியத்தையும் தெளிவுபடுத்துக?

(04 புள்ளிகள்)

iv. இடைக்கால பாதீடு என்றால் என்ன? 2022ம் ஆண்டின் இடைக்காலப் பாதீட்டில் இலங்கை அரசு தன்வருமானத்தினை அதிகரிப்பதற்கு முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

(04 புள்ளிகள்)

v. கடந்த ஐந்து ஆண்டில் (2017 - 2021 வரை) இலங்கை அரசாங்கத்தின் பாதீட்டின் மொத்த மீதியின் போக்கினை வெளிப்படுத்துவதோடு அதன் விளைவுகளையும் வெளிப்படுத்துக.

(04 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

08.

i. பின்வரும் அட்டவணை ஒரலகு ஊழியத்திற்கான சராசரி வெளியீட்டினை காட்டுகின்றது..

| பண்டம் \ நாடுகள் | வெளியீட்டு மட்டம் | |
|---|---|---|
| | கொரியா | இந்தியா |
| அரிசி | 20 | 15 |
| இயந்திரம் | 15 | 10 |

அ. ஒவ்வொரு நாடும் எந்தெந்த பண்ட உற்பத்தியில் சிறப்புத்தேர்ச்சி அடையும்?
(02 புள்ளிகள்)

ஆ. வர்த்தகத்தின் மூலம் இரண்டு நாடுகளும் பரஸ்பர நன்மையடைய வேண்டுமாயின் பரிமாற்று விகிதம் எவ்வாறு காணப்படல் வேண்டும்?
(02 புள்ளிகள்)

ii. "இலங்கை அரசாங்கம் கடந்த இரண்டு ஆண்டுகளாக இறக்குமதிகளை கட்டுப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தி வருகின்றது" இவ் நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தினை கூறுக.
(04 புள்ளிகள்)

iii. சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்கு, நிதிக்கணக்கு ஆகியவற்றை வேறுபடுத்துக.
(04 புள்ளிகள்)

iv. ஐக்கிய அமெரிக்க டொலர் சந்தையில் அதன் கேள்வி, நிரம்பல் என்பவற்றை வரையறுத்து இலங்கை ரூபா ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு எதிராக தேய்வடைவதன் பொருளாதார விளைவுகள் நான்கினைக் குறிப்பிடுக?
(04 புள்ளிகள்)

v. பின்வரும் சர்வதேச அமைப்புக்களின் நோக்கங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

1. சர்வதேச நாணய நிதியம் (IMF) (02 புள்ளிகள்)
2. உலகவங்கி (World Bank) (02 புள்ளிகள்)

09.

i. பொருளாதார வளர்ச்சி என்பதனை வரைவிலக்கணப்படுத்தி அதனை மொத்த நிரம்பல் வளையி மூலம் வெளிப்படுத்துக? (05 புள்ளிகள்)

ii. மானிட அபிவிருத்தி என்றால் என்ன? மற்றைய தென்னாசிய நாடுகளுடன் (இந்தியா, பாகிஸ்தான்) ஒப்பிடும் போது இலங்கையின் மானிட அபிவிருத்தி சுட்டியின் பெறுமதி உயர்வாக இருப்பதற்குரிய காரணங்களை தெளிவுபடுத்துக?
(05 புள்ளிகள்)

iii. வருமான வறுமையிலிருந்து மானிட வறுமை எவ்வாறு வேறுபடுகின்றது?
(5 புள்ளிகள்)

iv. உலகவங்கியானது நாடுகளை அவற்றின் தலைக்குரிய வருமான மட்டங்களை அடிப்படையாகக் கொண்டு நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளது. அப்பிரிவுகளையும் ஒவ்வொரு பிரிவுக்குமான வருமான எல்லைகளையும் குறிப்பிட்டு, இலங்கை 2021ம் ஆண்டுத் தரவின்படி எவ்வகுதிக்குள் உள்ளடக்கபட்டுள்ளது?
(05 புள்ளிகள்)

10.

i. 2020இல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் எதிர்க்கணியமாகக் காணப்பட்டமைக்குரிய காரணங்கள் யாவை? **(5 புள்ளிகள்)**

ii. இலங்கையின் வேலையின்மையின் தனித்துவமான பண்புகளை சுருக்கமாக விளக்குக.
**(05 புள்ளிகள்)**

iii. கடந்த பத்தாண்டு காலத்தில் இலங்கை அரசாங்கத்தின் மொத்தப் படுகடன் போக்கினை பரிசீலனை செய்க. **(05 புள்ளிகள்)**

iv. தனியார் மயமாக்கல் என்றால் என்ன? அதற்கு ஆதரவான வாதங்களை விளக்குக.
**(05 புள்ளிகள்)**